# தேசியம்

THESIYAM ජේසියම්

www.thesiyamnews.com

சிறந்ததில் மிகச்சிறந்தது
OFFSET | DIGITAL | SCREEN PRINTING | CTCP PLATE MAKING | WEDDING CARDS
MATHI COLOURS
NO. 10, MURUGESAR LANE,
NALLUR, JAFFNA.
TEL : 021 222 9285
E-mail : mathicolours@gmail.com
CUSTOMER CARE
+94 77 722 2259

குரல் - 46 | 05.05.2023 (வெள்ளிக்கிழமை) | சித்திரை மாதம் | பக்கங்கள் 7 | ஊக்குவிப்பு : ரூ.30.00

## மக்களின் அமைதியான போராட்டங்களை தடுக்க முடியாது!

### கைதான 5 பேருக்கும் பிணை நீதிமன்றம் அதிரடி உத்தரவு!



### விகாரைக்கு இடையூறு இல்லாமல் போராட்டம் நடத்த நீதிமன்றம் அனுமதி:



பக்கம் 5

## அத்துமீறல்கள் இடம்பெற்றிருக்குமாயின் ஏற்றுக்கொள்ள முடியாது - டக்ளஸ் திட்டவட்டம்!

தையிட்டியில் விகாரை அமைக்கப்பட்டுள்ள விவகாரம் தொடர்பான ஆவணங்களை ஆராயவுள்ளதுடன் அதனை சிறிலங்கா அதிபரின் கவனத்திற்கு கொண்டு செல்ல இருப்பதாகவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார். மேலும் அத்துமீறல்கள் இடம்பெற்றிருக்குமாயின் அவற்றை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் தெரிவித்தார். நேற்று இடம்பெற்ற யாழ் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தினை தொடர்ந்து ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே கடற்றொழில் அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,



பக்கம் 5

## வடக்கு - கிழக்கை பிரிக்க முடியாது

### செல்வம் எம்.பி தெரிவிப்பு!




வடக்கின் அதிகாரப் பரவலாக்கம், நிர்வாகம் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பிலும் கலந்துரையாடல்களை மேற்கொள்ளும் போது கிழக்கு மாகாணத்தையும் ஒன்றிணைத்து நடத்துவது சிறந்ததாக உள்ளது. எனவே, இவ் விடயத்தில் ஜனாதிபதி துரித நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

பக்கம் 5

## இன்று இறுதி நாள் போராட்டம்.!! தையிட்டியில் அணிதிரளுங்கள்

### தமிழ்த் தேசியப் பேரவை அறைகூவல்...!



பக்கம் 5

**வலி வடக்கு தையிட்டியில் தனியார் காணிகளை சட்டவிரோதமாக ஆக்கிரமித்து சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள திஸ்ஸ விகாரைக் கட்டுமானத்திற்கு எதிராக முன்னெடுக்கப்பட்டுவரும் போராட்டத்தின் இறுதி நாளான நாளையதினம் இடம்பெறும் போராட்டத்திற்காக தையிட்டிக்கு அனைவரையும் அணி திரளுமாறு தமிழ்த் தேசியப் பேரவை அழைப்பு!**

## தமிழ் மக்களை பயங்கரவாதிகளாகத்தான் பார்க்கப் போகின்றார்களா?

### முன்னாள் எம்.பி.சரவணபவன்



பக்கம் 5

தமிழ் மக்கள் பயங்கரவாதிகள் என்ற எண்ணப்பாடே தையிட்டியில் அரசின் அராஜகத்திற்கு காரணம் என நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன் தெரிவித்தார். தையிட்டி பகுதியில் முன்னெடுக்கப்பட்டிருக்கும் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன் நேற்று மாலை 2 மணியளவில் சம்பவ இடத்திற்கு

## யுத்தத்தை வென்றவர்கள் நாங்கள்... தமிழர்களை எப்படி நடத்துவதென எமக்கு தெரியும் :

### பொலிஸ் பொறுப்பதிகாரி பகிரங்க மிரட்டல்: கஜேந்திரன் எம்.பி குற்றச்சாட்டு!



பக்கம் 5

போராட்டக்காரர்கள் நேற்று முன்தினம் விகாரைக்கு முன்பாகவே தங்கியிருந்தனர். நேற்று முன்தினம் பரவலாக மழை பெய்யததால், விகாரைக்கு எதிரில் உள்ள தனியார் காணிக்குள், காணி உரிமையாளரின் ஒப்புதலுடன் கொட்டகை அமைக்கப்பட்ட போது, பொலிசார் மிலேச்சத்தனமாக நடந்து கொட்டகை அமைக்க தடையேற்படுத்தினர். இதனால் போராட்டக் களத்தில் பரபரப்பு ஏற்பட்டது. இது குறித்து சம்பவ இடத்திலிருந்த நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் கருத்து தெரிவிக்கையில்,

“சட்டவிரோத விகாரையை அகற்றி காணிகளை



# சவாலும் சந்தர்ப்பமும் ஒரே நேரத்தில் எதிர் நிற்கையில் தமிழ்த் தேசியக் கட்சிகள் செய்ய வேண்டியது என்ன...?

தமிழ்த் தேசியக் கட்சிகள் அனைத்தும் ஒன்றுபடாமல் - ஒன்றுபட முடியாமல் பிரிந்து நிற்கின்றன.

தமிழ்த் தேசியத்தை முன்வைத்து செயற்படும் 09 தமிழ் அரசியல் கட்சிகள் 4 அணிகளாக பிரிந்து நிற்பதை தேசியம் தனது நேற்றைய ஆசிரியத் தலையங்கத்தில் சுட்டிக்காட்டி இருந்தது.

**ஒன்றுபடுவார்களா இவர்கள்? என்ற கேள்வியையும் எழுப்பியிருந்தது.**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற பெயரில் 5 கட்சிகள் ஓரணி சேர்ந்திருக்கையில் தமிழரசுக் கட்சி, மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி என்பன தனித்தனியாகவும், விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் கூட்டணியுடன் அனந்தி சசிதரன் தலைமையிலான ஈழத் தமிழர் சுயாட்சிக் கழகம் கைகோர்த்து ஓர் தனி அணியாகவும் இருந்து கொண்டிருப்பதுதான் இன்றைய தமிழ்க் கட்சிகளின் ஒற்றுமை!

இந்த தமிழ் கட்சிகள் அனைத்துமே இலங்கைத்தீவின் இனப்பிரச்சனைக்கு தீர்வாக சமஷ்டி என அழைக்கப்படுகின்ற இணைப்பாட்சி முறையையே முன் வைத்து நிற்கின்றன.

**சுயநிர்ணய அடிப்படையில், இணைப்பாட்சி முறையின் கீழ், வடகிழக்கு மாகாணங்களை உள்ளடக்கிய தமிழ் மாநிலத்துக்கு சுயாட்சி வழங்கப்பட வேண்டும் என்பதுதான் இந்த அரசியல் கட்சிகளின் அடிப்படை நிலைப்பாடு.**

சமஷ்டி எனப்படும் இணைப்பாட்சி முறை நாட்டை பிரிப்பது அல்ல - பிரிவினை அல்ல என்பதை நன்கு தெரிந்து கொண்டும் சிங்கள இனவாதிகள் அது பிரிவினைவாதம் என கடந்த 70 வருடங்களுக்கு மேலாக விதண்டாவாதம் செய்து வந்திருக்கின்றார்கள்.

சமஷ்டிக் கோரிக்கையை அடிப்படையாக கொண்டு, 1949ல், தமிழ் காங்கிரஸ் கட்சியில் இருந்து பிரிந்திருந்த நிலையில் அன்றைய காங்கேசன்துறை தொகுதி எம் பி செல்வநாயகம் தமிழரசுக் கட்சியை ஆரம்பித்த நாளில் இருந்து இதுதான் நிலவரம்.

1956 பொதுத்தேர்தலில், தமிழ்க் காங்கிரஸ் உள்ளிட்ட ஒத்துழைப்பு தமிழ் அரசியல் வாதிகளின் கைகளில் இருந்து வந்த தமிழ் அரசியல் தலைமை தமிழரசுக் கட்சியால் கைப்பற்றப்பட்டது.

அந்த நாளில் இருந்து, சமஷ்டி எனப்படும் இணைப்பாட்சி கோரிக்கைக்கு எதிரான சிங்கள இனவெறிக் கூச்சலும் தீவிரம் அடைந்தது..

1956 ல் இருந்து 1972 வரையில், சமஷ்டிக் கோரிக்கை கோலோச்சிய தமிழ்த் தேசிய அரசியல் பரப்பில், அந்த ஆண்டு கொண்டு வரப்பட்ட குடியரசு அரசியல் சாசனத்தோடு, தமிழ் தேசிய இனத்தின் அரசியல் குறிக்கோளும் தடம் மாறத் தொடங்கியது.

தமிழீழக் கோரிக்கையை எழுப்ப தொடங்கியிருந்த ஒரு சில தமிழ் அரசியல்வாதிகளை கேலியும் கிண்டலும் செய்து வந்த, தமிழரசுக்கட்சியும், தமிழ் காங்கிரஸ் கட்சியும் தமது பகைமையை கைவிட்டு தமிழர் கூட்டணியாக அதே கோரிக்கையை முன்வைத்தன.

**1977 பொதுத்தேர்தலில் தமிழர் கூட்டணி, தமிழர் விடுதலைக் கூட்டணி என்ற பெயர் மாற்றத்தோடு தமிழீழத்தின் பெயரால் மக்களிடம் ஆணையை கோரியது.** அந்த ஆணை அமோக ஆதரவுடன் வழங்கப்பட்டது.

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் அமிர்லிங்கம் 18 எம் பிக்களோடு எதிர்க் கட்சி தலைவர் ஆக தெரிவு செய்யப்பட்டார்.

பதவிக்கு வந்திருந்த ஜெயவர்த்தன அரசு தமிழர் விடுதலை கூட்டணியோடு நடாத்தி வந்த பேச்சுவார்த்தை, மாவட்ட அபிவிருத்தி சபைகளை பிரசவித்தது.

தனிநாடு கோரி நின்ற தமிழர் விடுதலைக் கூட்டணி, இப்பொழுது மாவட்ட அபிவிருத்தி சபைகளுக்களான தேர்தலில் தமிழ் மக்களிடம் வாக்கு கேட்டது!

இந்த சந்தர்ப்பவாத அரசியலால் ஏமாற்றமடைந்திருந்த தமிழ் மக்கள் அந்த தேர்தலிலும் தமிழர் விடுதலைக் கூட்டணிக்குத்தான் வாக்களித்தார்கள்!

காரணம், எழுச்சி பெறத் தொடங்கியிருந்த தமிழ் இளைஞர் இயக்கங்களின் வன்முறை நடவடிக்கைகளுக்கு பதிலடியாக, அன்றைய ஜனாதிபதி ஜெயவர்த்தன கட்டவிழ்த்து விட்டிருந்த அப்பட்டமான அரச பயங்கரவாதம்!

இந்த சூழ் நிலையில், 1983 ஆடியில் தமிழ் மக்கள் மீது ஜனாதிபதி ஜெயவர்த்தனவின் அரசு தொடுத்த, பிரகடனப்படுத்தப்படாத போருக்குப் பதிலளிக்கும் விதத்தில், தமிழர் தரப்பில் ஆயுதம் ஏந்திய விடுதலை இயக்கங்கள் போரில் இறங்கின.

26 வருடங்கள் நீடித்த யுத்தம், 2009 மே மாதம், அதாவது, 14 ஆண்டுகளுக்கு பின்னர் முள்ளிவாய்க்காலில், இந்தியா உட்பட வெளிநாடுகளின் உதவியோடு ஸ்ரீலங்கா அரசினால் வெற்றி கொள்ளப்பட்டது.

இப்பொழுது 14 ஆண்டுகள் உருண்டோடி விட்டன. இருந்தும், தமிழ் மண்ணில் செயற்பட்டுக்கொண்டிருக்கும். 9 அரசியல் கட்சிகள் ஒரே கொடியின் கீழ் அணி திரள முடியாமல் அல்லாடிக் கொண்டிருப்பது தமிழ்த் தேசத்தின் மிகப்பெரிய சாபக்கேடு.

தமிழர் தேசத்தை சிதைத்துவிட சிங்கள பௌத்த பேரினவாதம் சீறி நிற்கையில், எமது மக்களின் பிரச்சனைக்கு தீர்வாக சமஷ்டிக் கோரிக்கையை வலியுறுத்துகின்ற தமிழ்த் தேசியக் கட்சிகள் அனைத்தும், அந்தக் கோரிக்கையின் பின்னால் ஓரணியாக திரள முடியாதிருப்பது, **முள்ளிவாய்க்காலுக்கு அடுத்தபடியாக தமிழர் தேசம் சந்திக்கும் மிகப் பெரிய அரசியல் சோகம்** என்பதை சொல்லித்தான் ஆக வேண்டும்.

**ஒரே குரலில் சமஷ்டிக் கோரிக்கையை வலியுறுத்த இந்த கட்சிகள் தயங்குவது ஏன்?**

ஒன்றுபடத்தான் முடியவில்லை! ஆனால், அதை புரிந்து கொள்ள முடியும். அது எமது அரசியல் தலைவர்களின் பரம்பரை வியாதி.

ஆயினும், சமஷ்டிக் கோரிக்கையின் அடிப்படையில் இந்தக் கட்சிகள் எல்லாம் ஒரு பொது உடன்பாட்டிற்கு வருவதற்கு அப்படி என்ன தான் தடை இருக்கின்றது?

தமிழரசுக் கட்சியின் சமஷ்டிக் கோரிக்கையை தனது காலத்தில் தொடர்ந்து 22 ஆண்டுகளுக்கு மேலாக, நார்நாராக கிழித்து வந்த தமிழ் காங்கிரஸ் தலைவர், மறைந்த ஜீ.ஜீ பொன்னம்பலத்தின் பேரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலமே, இப்பொழுது அந்த கட்சியை, சமஷ்டிக் கோரிக்கையின் தீவிரமான முன்னெடுப்புக்கு கொண்டு வந்திருக்கும் நிலையில், இத்தகைய பொது உடன்பாட்டுக்கு வருவதில் என்னதான் தடை இருக்க முடியும்?

மாகாணசபைகள் திட்டத்தை அறிமுகப்படுத்திய 13வது அரசியல் திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதை ஓர் இடைக்கால ஏற்பாடாக வலியுறுத்திட கஜேந்திரகுமாரின் தமிழ்க் காங்கிரஸ் மறுத்துவருகின்றது. இவ்விதம் மறுப்பதற்கு அந்த கட்சிக்கு சகல உரிமைகளும் உண்டு.

இருந்தாலும், 13 வது திருத்தம் தொடர்பில் அழுத்தம் கொடுப்பதில் சற்று பின்னடைவை இந்த மறுப்பு ஏற்படுத்துகின்றது என்பதும் உண்மைதான்.

ஆனால், அதை வைத்து அவரின் கட்சியை ஓரம் கட்டிவிடலாம் என ஏனைய தமிழ்த் தேசியக் கட்சிகள் நினைக்கக் கூடாது.

இப்பொழுது **சமஷ்டிக் கோரிக்கையை ஒன்றுபட்டு வலியுறுத்த இன்றைய அரசியல் சூழல் ஓர் நல்ல வாய்ப்பினை தமிழ்த் தேசியக் கட்சிகள் அனைத்துக்கும் தந்திருக்கின்றது.**

ஏனெனில், 13 வது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த தயார் என்று ஒரு சில சந்தர்ப்பங்களில் பகிரங்கமாக கூறிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அதனை படிப்படியாகத்தான் செய்ய முடியும் என்கின்றார்.

இந்திய அரசாங்கமும் அதனை ஆமோதிக்கின்றது. இதே வேளையில் இனப்பிரச்சனைக்கான அரசியல் தீர்வினை, பாராளுமன்றத்தையே ஒரு தேசிய அரசாங்கமாக்கி, காண முயற்சிக்க வேண்டும். என்னும் நவீன யோசனை தனது மேதின செய்தியில் முன்வைத்திருக்கும் ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்க அதற்கு தமிழ் கட்சிகளின் ஒத்துழைப்பையும் கோருகின்றார்.

அடுத்த ஜனாதிபதி தேர்தலுக்கான அவரின் நிகழ்ச்சி நிரலோடு இது பொருந்தி நிற்கின்றது.

2024ல் தான் நடாத்த விரும்பும் ஜனாதிபதி தேர்தலில் தமிழர் வாக்குகளை வளைத்துப் போட ரணில்விக்கிரமசிங்க விரிக்கும் வலை இது.

அதே நேரத்தில் 13வது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தி பௌத்த, சிங்கள பேரினவாதத்தை பகைத்துக் கொள்ளவும் அவர் தயாராக இல்லை.

ஏனெனில், ஜனாதிபதி தேர்தல் நிகழவிருக்கும் சூழ்நிலையில், பௌத்த சிங்கள பேரினவாதத்தோடு அநாவசியமாக முரண்படுவதற்கு ரணில் விக்கிரமசிங்க ஒன்றும் அரசியல் கற்றுக்குட்டி அல்ல.

இந்த பின்னணியில், இலங்கையில் திடமாக கால்பதித்திருக்கும் சீனாவின் நடவடிக்கைகள் தொடர்பில், தான் காட்டி வரும் கழுகுப் பார்வையில் பத்தில் ஒரு பங்கைக் கூட, தமிழரின் பிரச்சனை தொடர்பில் திருப்புவதற்கு இந்தியாவுக்கு மனமில்லை.

காரணம், **இலங்கை அரசாங்கத்தை மென்வலுவுடன் கையாளவே அது விரும்புகின்றது.**

இந்திய ராஜதந்திரம், இன்றைய சூழ்நிலையில் தமிழர் தேசத்திற்கு எதனையும் உருப்படியாகவும், உடனடியாகவும் தரப் போவதில்லை.

இருந்தும், வேறு வழி இல்லை என முடிவு கட்டியிருக்கும் தமிழ்க் கட்சிகள், கஜேந்திரகுமாரின் தமிழ்க் காங்கிரஸ் நீங்கலாக, 13 வது திருத்தத்திலேயே தொங்கிக்கொண்டு இருக்கின்றன.

**மாகாண சபைகளுக்கான தேர்தலும் இல்லை! 13வது திருத்தமும் முழுமையாக இல்லை!** தொடர்ந்து வெற்று வாக்குறுதிகளே நீடிக்கப் போகின்றன என்பதுதான் இன்றைய யதார்த்தம்.

**சவாலான இந்த அரசியற் சூழ்நிலையில், இணைப்பாட்சி கோரும் ஓர் பொது நிலைப்பாட்டை ஒரே குரலில் வலியுறுத்த, தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு கிடைத்திருக்கும் சந்தர்ப்பம், உரிய முறையில், விரைவாக பயன்படுத்தப்பட வேண்டும்.**

**காலப்போக்கில் ஒரே கொடியின் கீழ் ஓர் பலமான அரசியல் ஒற்றுமை மலர்வதற்கும் அது வழிவகுக்கும்.**

பார்த்தசாரதி

## மட்டக்களப்பில் பெண்கள் பாடசாலையில்

# ஆசிரியர் ஒருவர் மீது தாக்குதல் நடாத்திய சக ஆசிரியர் கைது!!

மட்டக்களப்பு நகரிலுள்ள தேசிய பெண்கள் பாடசாலை ஒன்றில் இடமாற்றம் பெற்று வந்த ஆசிரியர் சங்க தலைவரை கடமையேற்க அனுமதிக்க வேண்டாம் என சக ஆசிரியர்களை கேட்டுக் கொண்ட ஆசிரியர் மீது தாக்குல் மேற்கொண்ட சக ஆசிரியர் ஒருவரை நேற்று புதன்கிழமை (4) மாலை கைது செய்துள்ளதுடன் தாக்குதலில் காயமடைந்த ஆசிரியர் வைத்தியசாலையில் அனமதிக்கப்பட்டுள்ளதாக மட்டு தலைமையக பொலிசார் தெரிவித்தனர்.

குறித்த பாடசாலைக்கு மட்டக்களப்பு ஆசிரியர் சங்க தலைவர் உதயரூபன் இடமாற்றம் பெற்று செவ்வாய்க்கிழமை தனது கடமையை பெறுப்பேற்க வந்துள்ளமைய அறிந்த பாடசாலை அபிவிருத்தி குழுவினர் பாடசாலைக்கு சென்று அவர் கடமையேற்க முடியாது அவர் தொடர்பாக கல்வி திணைக்களத்தில் 40 முறைப்பாடுகள் இருப்பதுடன் அதிபர் இல்லாத வேளையில் காலையில் சென்று கையொப்பம் இட்டு கடமையை பெறுப் பேற்றுள்ளமை போன்ற பல்வேறு குற்றச்சாட்டுக்களை முன்வைத்து அவரை இங்கு கடமையாற்ற அனுமதிக் மாட்டோம் என தெரிவித்ததையடுத்து அங்கு ஆசிரியர் சங்க தலைவருக்கும் பாடசாலை அபிவிருத்தி குழுவினருக்கும் இடையே பெரும் குழப்பநிலை ஏற்பட்டது.

இந்த நிலையில் பாடசாலை பகல் 1.30 மணிக்கு முடிவடைந்த போது ஆசிரியர் சங்க தலைவரை கடமை கையேட்டில் கையொப்பம் இடுவதற்கு அனுமதிக்காததையடுத்து அங்கு பெரும் குழப்ப நிலை உருவாகிய சிலையில் அவர் அங்கிருந்து வெளியேறி பொலிஸ் நிலையத்திற்கு சென்று தன்னை பாடசாலை அபிவிருத்தி குழுவைச் சேர்ந்த 10 பேர் கடமையாற்ற அனுமதிக்காது தடுத்துள்ளதாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இந்த சம்பவத்தையடுத்து சம்பவதினமான நேற்று காலை 7 மணிக்கு பெற்றோர்கள் பாடசாலை அபிவிருத்திக் குழுவினர் பாடசாலைக்கு முன்னால் ஒன்றிணைந்து கூடிநின்று கடமையேற்கவரும் ஆசிரியர் சங்க தலைவரை பாடசாலைக்குள் அனுமதிக்க விடாது அவருக்கு எதிர்ப்பு தெரிவிக்க காத்திருந்தனர்.

இந்த சம்பவத்தின் எதிரொலியாக பாடசாலையில் கல்வி கற்பித்து வரும் ஆசிரியர் ஒருவர் சக ஆசிரியர்களிடம் ஆசிரியர் சங்க தலைவரை கடமையேற்ற விடவேண்டாம் என கோரியதையடுத்து அவர் மீது திடீரென சக ஆசிரியர் ஒருவர் தாக்குதலை தாக்குதலை மேற்கொண்டுள்ளதையடுத்து அவர் காயமடைந்த நிலையில் உடனடியாக பொலிஸ் நிலையத்திற்கு சென்று முறைப்பாடு தெரிவித்துவிட்ட பின்னர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதையடுத்து தாக்குதலை மேற்கொண்ட ஆசிரியரை பொலிஸ் நிலையத்துக்கு வரவழைத்த நிலையில் அவரை கைது செய்துள்ளதாகவும் இவரை மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றில் நேற்று வியாழக்கிழமை ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

சரவணன்
உள்நாட்டு செய்திகள் - மட்டக்களப்பு

# ஸாஹிரா கல்லூரி வீதி ஒரு வழிப்பாதையாக மாற்றம் : அதிகாரிகளின் கோரிக்கையை நிறைவேற்றிய எந்திரி முனாஸ் !!





கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி மற்றும் ஸாஹிரா கல்லூரி மாணவ, மாணவிகள் மற்றும் ஆசிரியர்கள் பாடசாலைக்கு செல்லும் மற்றும் பாடசாலையை விட்டு வீடு செல்லும் நேரங்களில் போக்குவரத்து நெறிசலைக் குறைப்பதற்காக ஸாஹிரா கல்லூரி வீதியினை ஒரு வழிப்பாதை மாற்றுவதற்கான பெயர்ப் பலகையினை கல்முனை வீதி அபிவிருத்தி திணைக்களம் புதன்கிழமை பொறுத்தியுள்ளது.

இதற்கமைவாக பாடசாலை ஆரம்பிக்கும் நேரங்களில் காலை 7.00 மணி முதல் காலை 8.00 மணி வரை மற்றும் பாடசாலை விடும் நேரங்களில் மதியம் 1.30 மணி முதல் 2.30 மணி வரை வெள்ளிக்கிழமை பாடசாலை விடும் நேரமான காலை 11.00 மணி முதல் 12.00 மணி வரை குறித்த நேரங்களில் பிரதான வீதியிலிருந்து ஸாஹிரா கல்லூரி வீதிக்கு எந்த வித வாகனங்களும் உட்செல்ல முடியாதவாறு ஒரு வழிப்பாதையாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கல்முனை வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் நிறைவேற்று பொறியியலாளர் எந்திரி எம்.எம்.முஹம்மட் முனாஸ் தெரிவித்துள்ளார்.

குறித்த பாடசாலைகள் ஆரம்பிக்கும் மற்றும் பாடசாலை விடும் நேரங்களில் வாகன சாரதிகள் பிரதான வீதியிலிருந்து ஸாஹிரா கல்லூரி வீதிக்கு உட்செல்வதை தவிர்த்து மாற்று வீதிகளை பயன்படுத்த முடியும் எனவும் எந்திரி எம்.எம்.முஹம்மட் முனாஸ் தெரிவித்துள்ளார். மஹ்மூத் மகளிர் கல்லூரிக்கு மாணவிகளை ஏற்றிச் செல்லும் வாகனங்கள் (வேன், கார்) முச்சக்கரவண்டிகள் உள்ளிட்ட மோட்டார் சைக்கிள்கள் பாடசாலையை விட்டு இரு மறுங்கிலும் 50 மீட்டர் தொலைவில் வாகனச் சாரதிகள் மாணவர்களை இறக்கி விடுதல் தொடர்பான பெயர்ப் பலகையும் பொறுத்தப்பட்டுள்ளதாக எந்திரி எம்.எம்.முஹம்மட் முனாஸ் மேலும் தெரிவித்துள்ளார்.

கல்முனை வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் நிறைவேற்று பொறியியலாளர் எந்திரி எம்.எம். முஹம்மட் முனாஸ் பாடசாலை சமூகத்தினரினதும் பெற்றோர்களினதும் நீண்ட கால தேவையை அறிந்து அவர்களின் அசௌகரியங்களை போக்குமுகமாக அவரது நேரடி வழிகாட்டலிலும் கண்காணிப்பிலும் இப்புதிய போக்குவரத்து நடைமுறை விரைவில் அமுலுக்கு வரவுள்ளமை குறிப்பிடத்தக்கது. இது தொடர்பிலான கலந்துரையாடலொன்று சில மாதங்களுக்கு முன்னர் இடம்பெற்றிருந்தது.

அந்த கலந்துரையாடலில் வீதி அபிவிருத்தி திணைக்கள நிறைவேற்று பொறியியலாளர் எம்.எம்.எம். முனாஸ், சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆசிக், கல்முனை பிரதேச செயலக உதவி திட்டமிடல் பணிப்பாளர் எம். ஜௌபர், கல்முனை மாநகர சபை பொறியியலாளர் ஜௌஸி அப்துல் ஜப்பார், கல்முனை ஸாஹிரா தேசிய கல்லூரி அதிபர் எம்.ஐ. ஜாபீர், கல்முனை மஹ்மூத் மகளிர் தேசிய கல்லூரி அதிபர் யூ.எல்.எம். அமீன், சாய்ந்தமருது ஜும்மா பள்ளிவாசல் தலைவர் ஏ. ஹிபத்துள் கரீம், கல்முனை பொலிஸ் நிலைய போக்குவரத்து பிரிவு பொறுப்பதிகாரி, பாடசாலை பிரதி அதிபர்கள், உதவி அதிபர்கள், ஒழுக்காற்று பிரிவு ஆசிரியர்கள், பிராந்திய ஊடகவியலாளர்கள் எனப்பலரும் கலந்து கொண்டு எடுத்த தீர்மானத்தின் அடிப்படையிலையே இவ்வேலைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

நூருல் ஹுதா உமர்
உள்நாட்டு செய்திகள் - கல்முனை

## திருகோணமலை நீதிமன்றில் நீதவான் முன்னிலையில்

# தனது கழுத்தை அறுத்துக் கொண்ட சந்தேக நபர்

திருகோணமலை நீதவான் நீதிமன்றில் சாட்சிக் கூண்டில் ஏறிய சந்தேக நபரொருவர் தனது கழுத்தை பிளேற்றினால் அறுத்து தற்கொலைக்கு செய்ய முயற்சித்த நிலையில் உயிர் தப்பிய நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சம்பவம் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்றுள்ளதாக துறைமுக பொலிசார் தெரிவித்தனர்.

சீனக்குடா பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கப்பல் துறையைச்சேர்ந்த யோகதாசன் லக்ஸன் வயது (25) என்பவர் ஹெரோயின் போதைப்பொருள் விற்பனைசெய்த குற்றச்சாட்டின்பேரில் கைதாகி விளக்கமறியலில் சிறைச்சாலையில் வைக்கப்பட்டிருந்த நிலையில் சம்பவதினமான இன்று வழக்கு விசாரணைக்காக நீதிமன்றிற்கு சிறைச்சாலை அதிகாரிகள் அழைத்துவந்திருந்தனர்.

இந்த நிலையில் குறித்த நபர் தொடர்பான வழக்கு விசாரணைக்காக நீதிமன்றில் நீதவான் முன்னிலையில் எடுக்கப்பட்டபோது சந்தேகநபர் நீதிமன்ற கூட்டில் எறிய நிலையில் தன்வசம் மறைத்து வைத்திருந்த சேவிங் பிளேட்டினை திடீரென எடுத்து தற்கொலை செய்வதற்காக நீதவான் முன்னிலையில் தனது கழுத்தை அறுத்ததையடுத்து படுகாயமடைந்துள்ளார்.

இதனையடுத்து அங்கிருந்த பொலிசார் உடனடியாக செயற்பட்டு தற்கொலை செய்ய முயற்சித்தவரை திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதித்தனர்.

குறித்த சந்தேக நபர் கடந்த 2021 ஜூன் மாதம் தனது மனைவியாரின் தந்தையையும் தன் குழந்தையையும் கொலை செய்ய முற்பட்டார் என்ற குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டவர் எனவும் இவரின் குழந்தை மரணித்துப்போன நிலையில், இவர் வழக்கிலிருந்து நீதிமன்ற பிணையில் விடுதலை செய்யப்பட்டவர் என பொலிசார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை திருகோணமலை துறைமுக பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

சரவணன்
உள்நாட்டு செய்திகள் - திருகோணமலை

# புறக்கணிக்கப்படும் வன்னி! யாழிலேயே இடமாற்றங்களை பெற்றுவரும் உத்தியோகத்தர்கள்

## பாராமுகமாக இருக்கும் வடக்கு மாகாண சபை

யுத்தத்தினால் பாதிப்புற்று தற்போது மீண்டுவரும் பெருநிலப்பரப்பில் வடக்கு மாகாண சபையின் அசண்டையீனங்களால் அபிவிருத்திகள் பாதிப்புக்குள்ளாகும் நிலை உருவாகியுள்ளது.

வருடாந்த இடமாற்றத்தில் வன்னிக்கு இடமாற்றம் வழங்கப்பட்ட யாழ்ப்பாணத்தை சார்ந்த பெரும்பாலானா உத்தியோகத்தர்கள் இதுவரை கடமைக்கு அறிக்கையிடாது யாழ்ப்பாணத்திற்குள்ளேயே இடமாற்றங்களை பெற்று வருகின்றனர்.

இதனால் ஏற்கனவே ஆளணி வெற்றிடங்கள் காணப்பட்ட வன்னி இப்போது இடமாற்றத்தில் யாழ்ப்பாணம் செல்வோர் விடுவிக்கப்பட்ட நிலையில் பதிலீடாக வருவோர் வராததனால் பெரிதும் பாதிப்புக்க உள்ளாகியுள்ளது.

அது மட்டுமல்லாது யாழுக்குள் பெருமளவு உத்தியோகத்தர்கள் உள்ள நிலையில் விசேட தரம் வழங்கப்பட்ட உத்தியோகத்தர்களும் இங்கு கடமையேற்கவில்லை.

இதற்கு வடக்குமாகாணசபை உயர்பீடங்களும் ஆதரவு வழங்கிவருவதாக அறிய முடிவதுடன், ஆளணி இல்லாத இடங்களில் சம்பளமும் வழங்கப்பட்டுவருவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

நியமனங்கள் அனைத்தும் வடக்கு மாகாணசபையின் எப்பாகத்திலும் சேவையாற்றவேண்டும் என்ற அடிப்படையில் வழங்கப்படுகின்றது. இவர்களை விடுவிக்க வேண்டிய அதிகாரிகளும் விடுவிக்கவில்லை இது தொடர்பாக ஆளுநரும் பாராமுகமாக இருப்பதாக விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உள்நாட்டு செய்திகள் - யாழ்ப்பாணம்

# தமிழர்களை ஏமாற்றும் இராணுவம்..!
## தாரைவார்க்கப்படுகிறதா மற்றுமொரு பகுதி



முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக அபிவிருத்தி குழுக் கூட்டம் நேற்று முன்தினம் (03) பிரதேச அபிவிருத்தி குழுத் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் தலைமையில் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்ட இராணுவ அதிகாரி ஒட்டுசுட்டான் நகரமையப்பகுதியில் நீர்ப்பாசன திணைக்களத்தின் 25 ஏக்கர் காணி மற்றும் இரண்டு தனிநபர் காணி மற்றும் இந்து மயானம் ஆகியவற்றை ஆக்கிரமித்து அமைக்கப்பட்டுள்ள 64 ஆவது படைப்பிரிவு முகாமிற்கான காணி ஆவணங்களை வழங்குமாறு கோரிக்கை விடுத்துள்ளார். இந்நிலையில், மக்களின் காணி, இந்து மயானம் என்பன விடுவிக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டது அது இன்னும் விடுவிக்கப்படவில்லை எனவும் மீதி அபகரிக்கப்பட்ட 25 ஏக்கர் தொடர்பில் நீர்ப்பாசன திணைக்களம் தமது கருத்துக்களை இதுவரை வழங்கவில்லை அவர்களுடைய கருத்துக்கு பின்பே இது தொடர்பாக முடிவு வழங்கலாம் என்று பிரதேச செயலாளர் தெரிவித்தார்.

இருப்பினும் பல காலமாக மயானம் ஆக்கிரமிக்கப்பட்டு காணப்படும் நிலையில் குறித்த பகுதி மக்கள் மயானத்துக்கு பல மயில்கள் செல்ல வேண்டிய நிலை காணப்படுவதாகவும், காணியை விடுவிக்கிறோம் என ஏமாற்றி வருவதாகவும் அதனை விரைவில் விடுமாறு பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவிக்கின்றனர்.

உள்நாட்டு செய்திகள் - முல்லைத்தீவு

# தமிழர் பகுதியில் சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்ட 25 மீனவர்கள் கைது!



திருகோணமலையில் கடற்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்ட 25 மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது குறித்த மீனவர்களின் 5 டிங்கி படகுகளும் கைப்பற்றப்பட்டுள்ளதாக கடற்படை தெரிவித்துள்ளது.

இவ்வாறு கைது செய்யப்பட்ட மீனவர்கள் 18 முதல் 57 வயதுக்கு இடைப்பட்ட துறைமுகம், கிண்ணியா, மூதூர் ஆகிய பகுதிகளை சேர்ந்தவர்களாவர்.

குறித்த மீனவர்கள், மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக திருகோணமலை மாவட்ட பிராந்திய கடற்றொழில் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக கடற்படை மேலும் தெரிவித்துள்ளது

உள்நாட்டு செய்திகள் - திருகோணமலை

# இலங்கையில் இராணுவ ஆட்சியே இடம்பெறுகின்றது..! - சுகாஷ் காட்டம்



இலங்கையில் இராணுவ ஆட்சியே இடம்பெறுவதாகவும், பொலிஸ் மற்றும் இராணுவத்தினரின் அராஜகம் குறையவில்லை எனவும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப்பேச்சாளரும், சட்டத்தரணியுமான கே.சுகாஷ் தெரிவித்துள்ளார்.

பலாலில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள போராட்டக்காரர்களை விடுவிப்பது தொடர்பாக பலாலி பொலிஸ் நிலையத்திற்கு சென்று வந்த பின்னர் கருத்து வெளியிடும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஜனநாயக வழியில் போராடிய அப்பாவிகள் ஒரு சிலரை கைது செய்து பலாலி பொலிஸ் நிலையத்திலே தடுத்து வைத்துள்ளனர். அதனால், அவர்களை விடுவிப்பதற்கான முயற்சியில் நாம் இறங்கியுள்ளோம் எனவும் தெரிவித்தார்.

தொடர்ந்தும் அவர் தெரிவிக்கையில், அந்த வகையில் பொலிஸ் பொறுப்பதிகாரியினை சந்திப்பதற்காக முயற்சி செய்திருந்தோம். ஆனால் எம்மை காக்க வைத்து திருப்பி அனுப்பியுள்ளனர்.

பொலிஸாரின் அராஜகமும், அடாவடியும் குறையவில்லை. ஆனாலும் அதற்கு நாம் அடிபணியவோ அல்லது சளைக்கவோ போவதன்று. மாறாக ஜனநாயக விரோத செயற்பாடுகளிற்கெதிராக குரல் கொடுப்போம்.

பலாலியில் இராணுவ பாதுகாப்பிற்கும், இராணுவ முகாம்களை தாண்டி பொலிஸ் நிலையத்தை அமைத்துள்ளனர். இங்கு வருவதற்கு கூட இராணுவத்தினரின் தலையீடு காணப்படுகின்றது.

இதனால் இலங்கையில் இராணுவ ஆட்சி இடம்பெறுகின்றது என்பதனை இதன் மூலம் உறுதிப்படுத்தி கொள்ளலாம்.

ஜனநாயகத்திற்கான அடக்கு முறைக்கு எதிராகவும், மக்களின் வாழ்வாதாரத்தினை அழிகின்ற பொலிஸ் மற்றும் இராணுவத்தின் அடாவடிதத்திற்கு எதிராகவும் தொடர்ந்தும் குரல்கொடுப்போம்.- என்றார்.

உள்நாட்டு செய்திகள் - யாழ்ப்பாணம்

# வவுனியாவில் வைரலான பேஸ்புக் பதிவு...!
## போராட்டத்தில் குதித்த பாடசாலை சமூகம்...!



தரணிக்குளம் கணேசுவரா வித்தியாலத்தின் தமிழ் பாட ஆசிரியர் தொடர்பாக சமூக வலைத்தளங்களில் பரப்பப்பட்டு வரும் போலியான தகவலுக்கு எதிராக பாடசாலை சமூகத்தால் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

நேற்று (04.05.2023) காலை பாடசாலைக்கு முன்பாக குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது கருத்து தெரிவித்த போராட்டகாரர்கள், எமது பாடசாலையின் தமிழ்பாட ஆசிரியர் மீது அண்மை காலமாக தவறான கருத்துக்கள் சமூக வலைத்தளங்களிலே பதியப்பட்டு வருகின்றது. அதற்கு எமது எதிர்ப்பினை தெரிவித்து கொள்கின்றோம்.

அத்துடன் சமூகத்திற்கு ஏற்பட்ட பிரச்சினை ஒன்றை தட்டி கேட்டதற்காக இழிவான முறையில் அவர் பழிவாங்கப்பட்டு கொண்டிருக்கின்றார். அந்த விடயத்தை பாடசாலை சமூகம் சார்பாக வன்மையாக கண்டிப்பதோடு குறித்த நபர்களுக்கு எதிராக உடனடியாக சட்டநடவடிக்கை எடுத்து ஆசிரியருக்கு ஏற்பட்டிருக்கும் களங்கத்தை துடைக்க வேண்டிய கட்டாய நிலைமையில் நாம் இருக்கின்றோம்.

ஒருதகவலின் உண்மைத்தன்மை தொடர்பாக ஆராயாமல் அதனை பலரும் பகிர்வு செய்தமையானது மோசமான ஒரு முன்னுதாரணத்தை ஏற்படுத்தியிருக்கின்றது.

எனவே இனியாவது உண்மைத் தன்மையினை உணர்ந்துசெயற்படுமாறு கேட்டுக் கொள்கின்றோம் என்றனர்.

எமது தமிழ் ஆசிரியருக்கு சரியான தீர்வினை பெற்றுக்கொடு, நீதியை நிலைநாட்டு அவதூறு வார்த்தை பேசாதே ஆசிரியர்களை பாதுகார் உண்மை மட்டும் பதிவிடு, ஆசிரியர்களை மன உளைச்சலுக்கு உள்ளாக்காதே போன்ற வாசகங்களையுடைய பதாதைகளை தாங்கி போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

போராட்டத்தில் மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

உள்நாட்டு செய்திகள் - வவுனியா

# அங்கஜன் கொடுத்த பிஸ்கட்டுக்களை தூக்கி எறிந்த
## தையிட்டி போராட்டகாரர்கள்..! அநாகரிகமற்ற செயலுக்கு வலுக்கும் எதிர்ப்பு...!



நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தையிட்டி போராட்டக்களத்தில் நின்றவர்களுக்கு என வழங்கிய நீராகாரத்தை தூக்கி வீசி அநாகரிகமாக நடந்து கொண்டமை அங்கிருந்தவர்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தி இருந்தது.

தையிட்டி விகாரையை அகற்ற கோரி புதன கிழமை (03) முதல் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், விகாரைக்கு எதிர்ப்பு தெரிவித்து, நேற்றைய தினம்(04) யாழ்.மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் இருந்து வெளிநடப்பு செய்த நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் போராட்டம் இடம்பெறும் இடத்திற்கு நேரில் வந்து, தனது ஆதரவை தெரிவிதத்துடன், அங்கிருந்தவர்களுக்கு சோடா, பால் பாக்கெட் போன்ற நீராகாரங்களையும் பிஸ்கட் வகைகளையும் வழங்கினார்.

போராட்ட களத்தில் இருந்து அங்கஜன் வெளியேறியதும் , அவர்கள் கொடுத்தவை அருகில் உள்ள வேலி ஓரம் வீசப்பட்டு இருந்தது.

அதனை அவதானித்த அங்கிருந்தவர்கள் , நாட்டில் பொருளாதார நெருக்கடிகள் காணப்படும் நிலையில், எவ்வளவோ பேர் உணவுக்காக ஏங்கி நிற்கும் நிலைமை காணப்படுகின்ற இந்த கால பகுதியில் உணவு பொருட்களை வீசி எறிந்து அநாகரிகமாக செயற்பட்டவர்கள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு குரல் கொடுக்க எந்த அருகதையும் அற்றவர்கள் என பலரும் கவலை தேய்ந்த குரலுடன் விசனம் தெரிவித்தனர்.

அதேவேளை போராட்ட களத்திற்கு ஆதரவு தெரிவிக்க சென்ற மக்கள் பிரதிநிதிகளை அங்கு நின்ற சிலர் அநாகரிகமாக பேசியும் , அநாகரிகமாக அவர்கள் தொடர்பில் குரல் எழுப்பியும் குழப்பங்களை உண்டு பண்ணும் விதமாக செயற்பட்டமை தொடர்பிலும் பல மக்கள் பிரதிநிதிகள் தமது ஆதங்கத்தை வெளிப்படுத்தி இருந்தனர்.

உள்நாட்டு செய்திகள் - யாழ்ப்பாணம்

## மக்களின் அமைதியான...

தையிட்டியில் அமைக்கப்பட்டுள்ள சட்ட விரோத விகாரைக்கு எதிராக அமைதியான முறையில் போராட்டம் நடத்தும் மக்களின் உரிமையை தடுக்க முடியாது என மல்லாகம் நீதவான் நீதிமன்ற நீதிபதி பொலிசாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

சட்டவிரோத விகாரைக்கு எதிராக நேற்று ஆரம்பித்த போராட்டத்திற்கு பொலிசார் இடையூறு ஏற்படுத்தியதுடன், போராட்டக்காரர்கள் 2 பேரையும், போராட்டக்களத்துக்கு பந்தல் அமைக்க வந்த 3 பேரையும் கைது செய்தனர்.

அத்துடன், போராட்டக்களத்திற்குள் மக்கள் நுழைய முடியாதவாறு தடுப்பு வேலிகள் அமைத்திருந்தனர்.

கைது செய்யப்பட்ட 5 பேரையும் பலாலி பொலிசார், மல்லாகம் நீதிமன்றத்தில் நேற்று முற்படுத்தினர். கைது செய்யப்பட்டவர்கள் சார்பில் சட்டத்தரணி க.சுகாஷ் முன்னிலையாகினார்.

அமைதியான வழியில் போராட்டம் நடத்தியவர்களை பொலிசார் கைது செய்ததை சுட்டிக்காட்டியதையடுத்து, நீதவான் அவர்களை பிணையில் விடுவித்தார்.

விகாரைக்கு முன்பாக போராட்டத்துக்கு தடைவிதிக்க வேண்டுமென பொலிசார் மன்றில் கோரிக்கை விடுத்தனர். சம்பவ இடத்துக்கு நேரில் வந்து பார்த்து விட்டு உத்தரவு வழங்குவதாக நீதவான் குறிப்பிட்டார்.

நேற்று மாலை போராட்டக்களத்துக்கு வந்த நீதவான், நிலைமைகளை அவதானித்த பின்னர், மக்களின் அமைதியான போராட்டத்துக்கு நிபந்தனையுடன் நீதவான் அனுமதியளித்தார்.

இதன்படி, விகாரைக்கு வருபவர்களிற்கு இடையூறு விளைவிக்காமல், விகாரையின் வழிபாடுகளுக்கு இடையூறு விளைவிக்காமல், வீதியை மறிக்காமல், சத்தம் எழுப்பாமல், போராட அனுமதியளித்தார்.

அத்துடன், விகாரைக்கு எதிரில் உள்ள வளவில் போராட்டம் நடத்த நீதவான் இடத்தையும் ஒதுக்கிக் கொடுத்துள்ளார்.

விகாரையின் காணி உரித்து தொடர்பான பிரச்சினைகள் இருந்தால் நீதிமன்றத்தை அணுகி நிவாரணத்தை பெற்றுக்கொள்ளலாம் என்றும் நீதிபதியின் தீர்ப்பில் குறிப்பிடப்பட்டள்ளது.

## அத்துமீறல்கள் இடம்பெற்றி...

”கடந்த காலங்களில் இராணுவத்தினர் நிலைகொண்டிருந்த பகுதிகளில் சிறிய விகாரைகள் அமைக்கப்பட்டிருந்ததும் பின்னர் அந்தப் பகுதிகள் மக்களிடம் கையளிக்கப்பட்டபோது அவை அகற்றப்பட்டிருப்பதையும் சில இடங்களில் காணக்கூடியதாக இருக்கின்றது.

இவ்வாறான நிலையிலேயே, தையிட்டி விகாரை தொடர்பாக சில தரப்புக்களினால் தற்போது பேசப்படுகிறது. இதற்கான அடிக்கல் 2021 ஆம் ஆண்டு அப்போதைய வடக்கு மாகாண ஆளுநரினால் நாட்டப்பட்டிருக்கிறது.

விகாரை அமைக்கப்பட்டுள்ள காணி தொடர்பான விபரங்களை சம்மந்தப்பட்ட பிரதேச செயலாளரிடம் கோரியிருக்கின்றேன். அவற்றை ஆராய்வதுடன், விரைவில் அதிபருக்கும் வடக்கு மாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையில் நடைபெறவுள்ள சந்திப்பிலும் பிரஸ்தாபிக்க எதிர்பார்க்கின்றேன்.

வெடுக்குநாறி விவகாரத்தினை சுமூகமான முறையில் தீர்த்து வைத்தது போன்று இந்த விடயங்களையும் அதிபர் சரியான முறையில் தீர்த்து வைப்பார்.

நாட்டை பொருளாதார நெருக்கடிகளில் இருந்து மீட்பதற்கு அதிபர் ரணில் விக்ரமசிங்க தலைமையிலான அரசாங்கம் மேற்கொண்டு வருகின்ற முயற்சிகள் வெற்றியடைந்து வருகின்றன.

## வடக்கு - கிழக்கை யாராலும்...

அவர் மேலும் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

எதிர்வரும் 11,12,13 ஆம் திகதிகளில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வடக்கில் உள்ள தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களை அழைத்து பேச உள்ளதாகவும் அதற்கான திகதி அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன் போது வடக்கின் அபிவிருத்தி மற்றும் அதிகார பரவலாக்கம் தொடர்பாகவும் வடக்கில் இடம்பெறுகின்ற பிரச்சினைகள் மற்றும் அதற்கு தீர்வு எடுப்பதற்கான விடயங்கள் குறித்து ஆராயப்படும் கூட்டமாக அமைந்துள்ளது.

எங்களைப் பொருத்தவகையில் அதனை நாங்கள் ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்றாக உள்ளது. எங்களுடைய தமிழ் மக்கள் ஒரு இனப்பிரச்சினை சார்ந்து நாங்கள் வடக்கு கிழக்கு சார்ந்து இந்த மண்ணை காப்பதற்காகவே எத்தனையோ போராளிகளும் பொது மக்களும் மரணித்தார்கள்.

எனவே, வடக்கில் மட்டும் அபிவிருத்தி மற்றும் அதிகார பரவலாக்கம் தொடர்பாகவும் வடக்கில் இடம் பெறுகின்ற பிரச்சனைகள் மற்றும் அதற்கான தீர்வு எடுப்பதற்கான விடையங்கள் குறித்து எடுக்கப்படுகின்ற முயற்சிகள் காலத்தை கடத்துகின்ற ஏமாற்றுகின்ற செயல்பாட்டை கையால்வதாகவும் அமைந்துள்ளது.

ஜனாதிபதியிடம் கோரிக்கை ஒன்றை முன் வைக்கின்றோம். வடக்கு கிழக்கு சார்ந்த அபிவிருத்தி, அதிகார பரவலாக்கல், வடக்கு கிழக்கில் இருக்கும் பிரச்சினைகளை தீர்க்க அவர் நடவடிக்கை எடுக்க வேண்டும். என்ற கோரிக்கையை நாங்கள் முன் வைக்கின்றோம்.

கோரிக்கை நிறை வேற்றப்படாது விட்டால் இக்கூட்டத்தில் கலந்து கொள்வதா? இல்லையா? என்பதை நாங்கள் முடிவெடுக்க கூடும். தமிழ் தேசியக்கூட்டமைப்பு இவ்விடையம் குறித்து ஆராய உள்ளது.

எனவே, வடக்கு கிழக்கு இணைந்த அபிவிருத்தி, அதிகார பரவலாக்கல் தொடர்பாக, பேச்சுவார்த்தை இடம்பெற வேண்டும். என்பது எமது கோரிக்கை. எனவே, கிழக்கை விடுத்து எவ்வித நல்லெண்ண முயற்சிகள் எடுத்தாலும், அந்த முயற்சி தோல்வியடையும்.

எங்களைப் பொறுத்த மட்டில் வடக்கு, கிழக்கு பிரதான மூச்சாக உள்ளது. எனவே, கிழக்கை விடுத்து வடக்கை மட்டும் பேச்சு வார்த்தைக்கு அழைப்பதை நாங்கள் ஏற்றுக் கொள்ள மாட்டோம். இவ்விடயம் குறித்து ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளேன்.

வடக்கு கிழக்கு இணைந்த பாராளுமன்ற உறுப்பினர்களை அழைத்து இவ்விடயம் தொடர்பாக கலந்துரையாடலை நடத்த வேண்டும்.

அதன் அடிப்படையில் உரிய காலத்திற்கு முன் தனது கருத்தை மாற்ற வேண்டும். இல்லை என்றால் எதிர்வரும் 11,12,13 ஆகிய திகதிகளில் இடம்பெற உள்ள கூட்டத்தில் தமிழ்தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொள்ள முடியாத துர்பாக்கிய நிலை ஏற்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## இன்று இறுதிநாள் போராட்டம்...

தையிட்டியில் தனியார் காணிகளை சட்டவிரோதமாக ஆக்கிரமித்து சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள திஸ்ஸ விகாரைக் கட்டுமானத்திற்கு எதிராகவும், தனியாருடைய காணிகளை உரியவர்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்று வலியுறுத்தியும் புதன் கிழமை பிற்கல் 3.00 மணிக்கு ஆரம்பிக்கப்பட்ட கவனீர்ப்புப் போராட்டம் இரவு பகலாக தொடர்ந்து இடம்பெற்றுவருகின்றது.

இப்போராட்டத்தை தடைசெய்வதற்கான உத்தரவினைக்கோரி நீதிமன்றுக்கு சென்ற பொலீசார் நீதிமன்றில் பொய்களைக் கூறி நீதிமன்றத்தை தவறாக வழி நடாத்தி தடையுத்தரவைப் பெற முயன்றனர்.

எனினும் தையிட்டி மக்கள் சார்பில் மல்லாகம் நீதவான் நீதிமன்றில் முன்னிலையாகிய சிரேஸ்ட சட்டத்தரணி க.சுகாஸ் மற்றும் சட்டத்தரணி க.மகிந்தன் ஆகியோர் மக்கள் தரப்பு நியாயங்களை முன்வைத்தன் அடிப்படையில் மல்லாகம் நீதவான் நீதிமன்ற நீதிபதி குறித்த போராட்டம் நடைபெற்ற இடத்திற்கு நேரில் விஜயம் செய்திருந்தார்.

விகாரையின் முகப்பிலோ, அல்லது பாதையிலோ தடைகளை ஏற்படுத்தாது, வழிபாட்டிற்கு வரும் மக்களுக்கோ, விகாரையில் இடம் பெறும் உச்சவத்திற்கோ இடையூறு ஏற்படுத்தாமலும், அமைதிக்குப் பங்கம் விளைவிக்காமலும் ஜனநாயக ரீதியான போராட்டங்களை நடாத்தலாம் என்று நீதிமன்றம் அனுமதியளித்துள்ளது.

அதன் பிரகாரம் நீதிமன்றத் தீர்ப்புக்குக் கட்டுப்பட்ட வகையில் அமைதியான முறையில் போராட்டம் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுகின்றது. இன்று 05-05-2023 வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணி வரை தொடரும். பௌத்த பேரினவாத ஆக்கிரமிப்புகளுக்கு எதிராக ஒட்டுமொத்த தமிழினமும் ஒன்று சேர்ந்து எதிர்ப்பினை வெளிப்படுத்தினாலே இவ்வாறான ஆக்கிரமிப்புகளை கட்டுப்படுத்தவும் ஆக்கிரமிக்கப்பட்ட காணிகளை விடுவிக்கவும் அத்துமீறி கட்டப்பட்ட விகாரையை அப்புறப்படுத்தவும் முடியும்.

இப்போராட்டத்தில் தமிழ்த் தேசிய உணர்வாளர்கள் அனைவரையும் நாளை காலை 8.30 மணிக்கு தையிட்டி விகாரை க்கு முன்பாக உள்ள தனியார் காணியில் இடம்பெறும் அமைதியான போராட்டத்தில் கலந்து கொண்டு போராட்டத்திற்கு வலுச்சேர்க்குமாறு அன்புடன் அழைக்கின்றோம் என தமிழ்த் தேசியப் பேரவையின் சார்பில் வலி வடக்கு - ஒருங்கிணைப்பாளர் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## தமிழ் மக்களை பயங்கரவாதி...

விரைந்து போராட்டத்தில் ஈடுபட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் உட்பட்ட நால்வருடன் கலந்துரையாடி கட்டப்பட்ட விகாரையினையும் பார்வையிட்டார் இதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார் இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்

தையிட்டியில் கட்டப்பட்டு முடியும் கட்டத்தில் உள்ள விகாரையை நேரடியாக பார்வையிட்டேன். நல்லிணக்கத்தை ஏற்படுத்தாத நிகழ்வுகளை தான் இந்த அரசு மேற்கொண்டு கொண்டிருக்கின்றது.

போராட்டங்கள் தொடரவேண்டும் .நான் நாடாளுமன்றத்தில் இருக்கின்ற பொழுது கூறினார்கள் ஆயிரம் விகாரை கட்டப்போகின்றார்கள் என்று ஆனால் அந்த நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில்தான் இவ்வாறான விகாரைகள் திட்டமிட்டு முளைத்துகொண்டு வருகின்றன இது சம்பந்தமாக ரணில் பேசப் போகின்றேன் கூப்பிட்டு கதைக்கதான் போகின்றேன் என்று சொல்லிக்கொண்டே இருக்கின்றார்

ஆனால் எதைப்பற்றி பேசப்போகின்றார் தமிழ் மக்களது பிரச்சினை சம்பந்தமாக பேசப்போகின்றேன் என்று சொன்னவர் தமிழ் மக்களுடைய தீர்க்கப்படகூடிய பிரச்சினைகள் அதிகாரபங்கீடு சம்மந்மானது நேரடியாக பேசிக் கொள்ளலாம் தமிழ் மக்களை துனபுறுத்துவது போராட்டம் நடத்த வந்தவர்கள் பொதுமக்கள் இந்த பொதுமக்களை கூட விரட்டியடித்து பாராளுமன்ற உறுப்பினர் உட்பட்ட நால்வரை முள்வேலிக்குள் வைத்து அடைத்து வைத்து உணவு மருந்தும் கொடுக்காது அடைத்து வைத்திருந்தார்கள் .

பின்னர் மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் அது சீராகியது இங்கு எதுவுமே தேவையில்லை இது சாதாரண இடம் இதற்கு போய் இவ்வளவு இராணுவம் பொலிஸ் பாதுகாப்பு ஏன் என்று தெரியவில்லை இங்கு என்ன இருக்கின்றது என்று இவ்வளவு அடாவடி செய்கின்றார்களோ தெரியவில்லை .

அவர்களுடைய எண்ணங்களை பாருங்கள் இன்னமும் நாங்கள் பயங்கரவாதிகள் தான் என்ற எண்ணம் தான் அவர்களுக்கு இருக்கின்றது. தமிழ் மக்களை தொடர்ச்சியாக பயங்கரவாதிகளாக தான பார்க்கபோகின்றார்களா? தொடர்ச்சியாக இவ்வாறு தமிழ் மக்களை புண்படுத்த போகின்றார்களா நல்லிணக்கத்தை ஏற்படுத்த முனையும் ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்க இதனை புரிந்து கொள்வாரா?

இங்க றோட்டிலே தான் படுத்துறங்குகின்றாகர்கள் ஆக தமிழ் மக்களிற்கு எதுவித தீர்வுகளும் கிடைக்கப்போவதில்லை அங்கே சுதந்திர தினித்திற்கு முன் செய்துமுடிக்கபோகின்றேன் என்றார் முடிந்ததா இல்லை எங்களை துன்புறுத்தும் சம்பவமே தையிட்டியில் தொடர்கிறது

இங்கு யாருமே இல்லை பல இடங்களில் இதோ இனி சுண்ணாகத்திலும் கந்தோரடையின் தெற்கு பக்கமாக தொடரபோகின்றார்கள் இப்படியான ஒவ்வொரு நிகழ்ச்சி நிரல்களையும் நிறைவேற்றி கொண்டு தான் போகின்றார்கள் தமிழர்களால் ஒன்றும் செய்யமுடியாமல் இருக்கின்றது. இது மீண்டும் நாங்கள் சாத்வீகத்தினூடாக எதையும் பெறமுடியாது என்பதனை சிங்கள பெரும்பாண்மை தையிட்டி சம்பவத்தினூடாக புலப்படுத்துகின்றது.

## யுத்தத்தை வென்றவர்கள்...

உரிமையாளர்களிடம் ஒப்படைக்க வேண்டுமென கோரி இந்த போராட்டம் நடக்கிறது. விகாரைக்கு முன்பாக உள்ள ஜெயக்குமாரின் காணிக்குள், அவரது ஒத்துழைப்புடன் கொட்டகை அமைக்கப்பட்டது. பொலிசார் மிலேச்சத்தனமாக நடந்து, அவற்றை அகற்ற வைத்துள்ளனர். கொட்டகைகளை அரசுடைமையாக்கி விடுவோம் என மிரட்டினர்.

அங்கிருந்த பொலிஸ் அதிகாரியொருவர், “நாங்கள் யுத்தத்தை வென்றவர்கள். உங்களை எப்படி நடத்துவதென எங்களுக்கு தெரியும்“ என வெறித்தனமாக தெரிவித்தார். அவரது மனதில் கொலைவெறி இருந்ததை பார்க்க முடிந்தது. அவர்கள் சில வேளைகளில் எங்களை கொலைசெய்து விடவும் கூடும். அந்தளவு வெறிகொண்டுள்ளனர்.

இவர்களை பௌத்த பிக்குகள் வழிநடத்துகிறார்களா அல்லது ரணில் வழிநடத்துகிறார்களா என தெரியவில்லை.

அதிலும், ஒரு தமிழ் பொலிஸ்காரர் - தானொரு தமிழன் என கூறிக்கொண்டு வெட்கம் கெட்ட முறையில் சட்டத்துக்கு புறம்பாக, உரிமையாளரின் அனுமதியுடன் அமைக்கப்பட்ட கொட்டகையை அகற்றுவதில் அவர் தான் சிங்களம் பேசுபவர்களை விட தீவிரமாக செயற்பட்டு வருகிறார் என்றார்.

உள்நாட்டு செய்திகள் - தொடர்ச்சிகள்

# வடகிழக்கு மக்களை சமய ரீதியில் போருக்கு அழைக்கும் சம்பவங்களே நடக்கின்றன! அருட்தந்தை மா.சத்திவேல்



வடகிழக்கு மக்களை சமய ரீதியில் விரைந்து போருக்கு அழைப்பதாகவே அண்மைய சம்பவங்கள் நடக்கின்றன என சமூக நீதிக்கான செயற்பாட்டாளரும், அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா.சத்திவேல் தெரிவித்துள்ளார்.

அவரால் நேற்று (04.05.2023) வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவித்துள்ளார். அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

யுத்த வலிகளோடு அன்றாட வாழ்வியல் போராட்டங்களை நடத்திக் கொண்டிருக்கும் வடகிழக்கு மக்களை சமய ரீதியில் விரைந்து போருக்கு அழைப்பதாகவே அண்மைய சம்பவங்கள் நடந்து கொண்டிருக்கின்றன.

படையினரின் தேவைக்கு தொடர்ந்து நிலங்களை ஆக்கிரமிப்பு செய்பவர்களே தற்போது புதிது புதிதாக பௌத்த சின்னங்களையும், விகாரைகளையும், தூபிகளையும் அமைத்து ஆக்கிரமிப்பிற்கு புதிய வடிவம் கொடுப்பதோடு இன்று பௌத்த - இந்து நேரடி மோதலுக்கும் வலிந்து அழைக்கின்றனர் என்பதை வலிகாமம் வடக்கு தையிட்டி நிகழ்வு எடுத்து காட்டுகின்றது.

அரசியல் உள்நோக்கம் கொண்ட இச் செயற்பாட்டினை சமயம் கடந்து அனைத்து தரப்பினரும் தமது எதிர்ப்பை வெளிப்படுத்த வேண்டும். உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்போடு கத்தோலிக்க மற்றும் முஸ்லிம்களுக்கு இடையில் மோதலை தூண்டி அரசியல் குளிர்காய நினைத்த சக்திகளும், அவர்களை இன்றும் பாதுகாக்கும் சக்திகளுமே அரச பயங்கரவாதத்தின் துணைகொண்டு தற்போது பௌத்த- இந்து மோதலை வடக்கிலே ஆரம்பிக்க முனைப்பு காட்டுகின்றன.

இதனை சமய நல்லிணக்கம் விரும்பும் அனைவரும் இதனை கண்டிப்பதோடு தனது பலத்த எதிர்ப்பையும் வெளிப்படுத்த வேண்டும்.

அடாத்தாக பௌத்த சின்னங்களை வைப்பதையும், விகாரைகள், தூபிகள் அமைப்பதையும் ஒரு சில கிறிஸ்தவ சமய அடிப்படை வாத சக்திகள் கட்டாய மதமாற்றத்தில் ஈடுபடுவதையும் சமய நல்லிணக்கம் விரும்பும் எவராலும் ஏற்றுக்கொள்ள முடியாது. இத்தகைய அநாகரீக செயல் கண்டிக்கப்பட வேண்டியதே.

இந் நிலையில் கிறிஸ்தவ தலைமைத்துவங்கள் அறிக்கைகளுக்கு மட்டும் தம்மை கட்டுப்படுத்தி விடாது ஒட்டுமொத்த தமிழ் சமூகத்தோடு கை கோர்த்து எழுந்து நிற்பதே தேசியத்தை பாதுகாக்கும் காலத்தின் அரசியல் செயற்பாடாகும்.

நில ஆக்கிரமிப்பிற்கும், புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்திற்கும் எதிர்ப்பு தெரிவித்து வடகிழக்கில் கடையடைப்பு செய்த அனைத்து தரப்பினரும் தமிழ் மக்களின் தேசிய நலன் கருதி ஒன்றிணைய வேண்டிய காலம். தையிட்டி மக்களுக்கு அவர்களுக்குரிய காணிகளை பெற்றுக் கொடுக்கும் செயற்பாட்டில் ஈடுபடுவது பிரதேசத்தையும், மக்களையும் பாதுகாக்கும் செயல் என்பதோடு தாயகத்தை காப்பதற்கான எதிர்கால செயற்பாட்டுக்கும் துணை செய்யும்.

இந்தியாவின் அரசியல் பிடிக்குள் இருந்து இலங்கை தம்மை விடுவித்து கொள்ள நினைக்கும் பின்னணியில் அதனை உணர்ந்து செயல்படும் இந்தியா அன்று உணவு பொட்டலங்களை பலவந்தமாக கொண்டு வந்து போட்டது போன்று எந்த காரியத்தையும் அவசரமாக போவதில்லை.

இந்தியாவின் அமைதி காத்தலை பாவித்து பௌத்த மட்டும் ராணுவ மயம் தொடர்கின்றது. அரசியல் நுண் அறிவோடும் மக்கள் சக்தியோடும் முன்னெடுக்கும் நகர்வுகளே ஆக்கிரமிப்பை தடுக்கும்.இலக்கு நோக்கிய அரசியல் பயணத்திற்குப் வழிவகுக்கும்.என்றார்

உள்நாட்டு செய்திகள் - யாழ்ப்பாணம்

# தையிட்டியில் இடம்பெறும் அராஜகங்களை புரிந்துகொண்டு ரணில் இனப்பிரச்சினையை தீர்க்கமுடியாது! விந்தன் கனகரத்தினம்



தையிட்டி போன்ற அராஜகங்களை புரிந்து கொண்டு பிரச்சனைக்கான தீர்வினை ஏற்படுத்த முடியாது வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் விந்தன் கனகரத்தினம் தெரிவித்தார் ஏற்படுத்தி ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது அறிவார் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்

நேற்றைய தினம் யாழ்பாணத்தின் காங்கேசன்துறை பகுதியில் அமைந்திருக்க கூடிய தையிட்டி பகுதியிலே ஒரு பிரமாண்டமான புத்தவிகாரையை இராணுவத்தினுடைய உதவியுடன் கட்டப்பட்டிருக்கின்றது.

அந்த இடமானது ஒரு தனியாருக்கு சொந்தமான நிலம். நீதிமன்ற கட்டளையை மீறி இப்படியான சம்பவங்கள் அரசாங்கத்தினால் திட்டமிட்டு வடக்கு கிழக்கிலே மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

தொடர்ச்சியாக வெடுக்குநாறிமலை, குருந்தூர்மலை, கந்நியா வெந்நீர், ஊற்று பிள்ளையார் ஆலய பகுதி அதனைவிட கிழக்கு மாகாணத்திலே மாதவனை பகுதி, மேய்ச்சல் தரவை இப்படியாக பல்வேறு அத்துமீறல்களை இந்த அரசாங்கம் மற்றும் அரச திணைக்களங்கள் குறிப்பாக தொல்லியல் திணைக்களம், பாதுகாப்பு அமைச்சு, பௌத்த சாசன அமைச்சு, மகாவலி அபிவிருத்தி திணைக்களம், வனவள ஜீவராசிகள் திணைக்களம் இப்படியாக பல திணைக்களங்கள் வடக்கு கிழக்கில் கட்டு மீறி தமிழ் மக்களினுடைய பூர்வீக நிலங்களில் சட்டவிரோதமாக பௌத்த விகிரைகளை அமைப்பதை தொடர்ந்து பார்த்து வருகிறோம்.

அரச படைகளும் அரசும் இதனை தொடர்ந்து வண்ணமே உள்ளன. இந்த லட்சணத்திலே இந்த நாட்டின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக இருக்கக்கூடிய ரணில் விக்கிரமசிங்க அண்மையிலே வவுனியாவில் தமிழ் கட்சிகளுடன் பேசி இனப்பிரச்சினைகளை தீர்ப்போம் என்ற ஒரு இணக்கப்பாட்டினை எட்டியிருந்தார்.

அதனைவிட இந்த ஆண்டு முற்பகுதியிலே பாராளுமன்ற சர்வகட்சி கூட்டத்தினையும் கூட்டி பல விடயங்கள் எட்டப்பட்டிருந்தாலும் அவற்றில் எவையுமே முறைப்படுத்த முடியாத நிலையில் மீண்டும் இப்பொழுது மே தினத்தன்று ஒரு அறைகூவலை விடுத்திருக்கிறார்.

தமிழ் கட்சிகள் ஒத்துழைப்பு தருவதில்லை என்றும் பாராளுமன்றத்திலே அரசாங்கத்தில் அங்கம் வகித்து பிரச்சினைகளை தீர்ப்போம் என்று கூறியிருக்கின்றார்.

இந்த சூழ்நிலையிலே நாங்கள் ஜனாதிபதியினை நோக்கி தமிழ் மக்கள் சார்பிலே சொல்லக்கூடியது. குறிப்பாக நீங்கள் நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக இருக்கின்றீர்கள்.

தற்போது நடைபெற்றுகொண்டிருக்கின்ற பௌத்தமயமாக்கல், சிங்கள குடியேற்றங்கள் என்பவற்றை உடனடியாக உங்களால் தடுத்து நிறுத்த முடியும்.

உங்களின் கீழே தான் இந்த அனைத்து அமைச்சுக்களும் திணைக்களங்களும் இயங்கி வருகின்றன. எனவே இந்த அதிகாரிகளும் இராணுவமும் கடற்படையும் புலனாய்வாளர்களும் பொலிசாரும் சட்டத்தை மீறி நீதிமன்ற கட்டளைகளை மீறி, மதிக்காமல் பல்வேறு அடாவடித்தனங்களை செய்துவருகின்ற நிலையில் நீங்கள் எந்தவொரு நல்லெண்ணத்தையும் நல்லிணக்கத்தையும் தமிழ்மக்கள் மீது காட்டாது ஒரு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக வந்த பின்பு எங்கள் மீது இருக்ககூடிய கோரிக்கை நியாயமானது. தமிழ் அரசியல் கைதிகளை நீங்கள் நினைத்தால் பொதுமன்னிப்பு அளித்து நாளையே விடுதலை செய்யலாம். அதனைவிட காணாமல் போனோருடைய பிரச்சினைக்கு என்ன தீர்வு என்ன நடந்தது என்ற தீர்வை உங்களால் சொல்லமுடியும்.

நடைபெறுகின்ற அட்டூழியங்களை ஒரு முறைமையின் அடிப்படையில் பாதுகாப்பு நீதியமைச்சர் என்ற ரீதியில் வெளிப்படுத்த முடியும்.

எங்களுக்கு எந்த சமிஞ்ஞையும் வெளிப்படுத்தாது வெறுமனே எங்கள் நிலங்களை ஆக்கிரமித்து எங்களை அழித்து கொண்டு எங்கள் கலாசாரத்தை, எங்கள் இருப்புக்களை இல்லாமல் செய்து கொண்டு மறுபுறமே இவ்வாறான கோரிக்கைகளை விடுகின்றீர்கள்.

நீங்கள் சர்வதேச நாணய நிதியத்தை சமாளிப்பதற்கும் உலக வங்கி ஆசிய அபிவிருத்தி வங்கி கடனைபெற ஐ.நாவை திருப்பதிபடுத்தவும்போடும் நாடகம்தான் இந்த அறைகூவல். எனவே இவற்றை ஏற்றுகொள்ளமுடியாது.

அரசாங்கம் நல்லெண்ண சமிக்ஞையாக அரசியல் கைதிகளை விடுதலை செய்து தையிட்டி போன்ற அபகரிப்புக்களை உடனடியாக நிறுத்தவேண்டும்.

காணாமல் போனோர் பிரச்சினை தீரவு வேண்டும். ஐ.நா தீர்மானத்தினை காட்டி நல்லெண்ணத்திற்கு அழைக்கவேண்டும்.

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். நாட்டினுடைய காட்டாட்சி இதன் மூலம் ஒழிக்கப்படும். பயங்கரவாத சட்டமும் ஒழிக்கப்பட வேண்டும்.

கிழக்கு மாகாணத்திலேயே தொடர்ந்து கொண்டிருக்கக் கூடிய அம்பாறை மாவட்ட மக்களது அடிப்படை பிரச்சனைகள் அதே போல திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்ட மக்களினுடைய பிரச்சினைகளும் உடனடியாக தீர்க்கப்பட வேண்டும்.

குறிப்பாக இந்த பிரதேச செயலகத் தலைமை தேர்தல் பிரச்சனை பிரதானமானதாக காணப்படுகின்றது. அம்பாறை மாவட்டத்திலும் தொடர்கின்ற அடக்குமுறை முதலில் ஒழிக்கப்பட வேண்டும் என அவர் தெரிவித்தார்.

உள்நாட்டு செய்திகள் - யாழ்ப்பாணம்

# தமிழ் கட்சிகளின் சந்திப்பில் வடக்கு ஆளுநரும் பங்கேற்கிறார்!
## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு!



தமிழ் கட்சிகளுக்கும் ஜனாதிபதிக்கும் இடையே இடம்பெறும் சந்திப்பில் வட மாகாண ஆளுநரும் பங்கேற்கிறார் என யாழ். மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

நேற்று வியாழக்கிழமை யாழ். மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற மாவட்ட அபிவிருத்தி கலந்துரையாடலின் தொடக்க உரையை ஆற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டின் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தமிழ் மக்களுடைய அரசியல் தீர்வு விடையத்தில் கரிசனையாக உள்ளார்.

எதிர்வரும் வாரங்களில் தமிழ் கட்சிகளுக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் தமிழ் மக்களின் அரசியல் தீர்வு விடயங்கள் தொடர்பில் விரிவாக கலந்துரையாடப்படவுள்ளது.

தமிழ் மக்களின் அரசியல் தீர்வு விடயங்களில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் காலத்தில் சரியான ஒரு தீர்வை எட்டலாம் என நான் நினைக்கிறேன்.

ஜனாதிபதியின் தீர்வை நோக்கிய செயற்பாடுகளுக்கு தமிழ் கட்சிகளும் தமிழ் மக்களும் ஒத்துழைப்பை வழங்குவதோடு ஆலோசனை யையும் வழங்க முடியும்.

அது மட்டுமல்லாது வட பகுதி அபிவிருத்திக்கு விசேட நிதி ஒதுக்குவது தொடர்பில் தொடர்பில் ஜனாதிபதி விரும்பும் நிலையில் அதற்கான சரியான திட்டங்கள் தொடர்பிலும் கலந்துரையாட உள்ளோம்.

ஆகவே ஜனாதிபதிக்கும் தமிழ் கட்சிகளுக்கும் இடையில் குறித்த கலந்துரையாடல் திட்டமிட்ட படி இடம்பெற உள்ளதோடு வட மாகாண ஆளுநரும் பங்கேற்கிறார் என அவர் மேலும் தெரிவித்தார்.

உள்நாட்டு செய்திகள் - யாழ்ப்பாணம்

# வெசாக் தினத்திற்காக இராணுவத்தினர் துரிதகதி
## அலங்கார பௌத்த சின்ன கொடிகள்! வெசாக் தோரண பந்தல்கள் அமைப்பு!





சிங்கள மக்களால் இன்றையதினம் புனித முழுமதி பௌர்ணமி செவாக் தினத்தினை முன்னிட்டு நேற்று யாழ். மாவட்டத்தில் உள்ள அனைத்துபௌத்த விகாரைகளிலும் மற்றும் பாதுகாப்பு படைத்தலைமைய பிரிவுகளின் அமைவிடங்களிலும் பௌத்தசின்ன கொடிகள் மற்றும் வெசாக் தோரணபந்தல்களை அலங்கரிக்கும் பணிகளை யாழ். மாவட்ட பாதுகாப்பு படைத்தலைமைய இராணுவத்தினர் முன்னெடுத்துள்ளனர்.

இவ் புனித நிகழ்வினை முன்னிட்டு யாழ். ஸ்ரீ நாகவிகாரை மத்தியஸ்தான விகாரையிலும் மற்றும் யாழ். நகர்புற இராணுவ பாதுகாப்பு படைப்புரிவுகளில் உள்ள பாதுகாப்பு வேலிகளிலும் பௌத்தசின்ன கொடிகள் மற்றும் வெசாக் தோரண பந்தல்களை இராணுவத்தினர் மிக ஆர்வத்துடன் அமைத்து வருவதை காணமுடிகின்றது.



உள்நாட்டு செய்திகள் - யாழ்ப்பாணம்

# பகல் கனவுடன் செயலாற்றி வரும் இனவாத அரசிற்கெதிராக
## எமது உரிமைகளை வென்றெடுக்க போராடுவோம் - பொன் குணரட்ணம் தெரிவிப்பு!




பகல் கனவுடன் செயலாற்றி வரும் இனவாத அரசிற்கெதிராக எமது உரிமைகளை வென்றெடுக்க போராடுவோம் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அமைப்பாளர் பொன் குணரட்ணம் தெரிவித்துள்ளார்.

தையிட்டியில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழினத்தை அடிமைப்படுத்தல் தொடர்ந்தும் இடம்பெற்று வருவதுடன் அதிலிருந்து விடுபடுவதற்கு ஆயுத ரீதியிலான போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டது.

அவை மௌனித்த பின்னர் மீண்டும் இன வழிப்பு செய்யும் நடவடிக்கைகளை அரசு முன்னெடுத்து வருகின்றது.

அந்த வகையில் தமிழர்களின் பல நிலப்பரப்புகள் அபகரித்து விகாரைகளை கட்டி சிங்கள அரசாக மாற்றலாம் என பகல் கனவுடன் செயலாற்றி வரும் இனவாத அரசிற்கெதிராக எமது உரிமைகளை முன்னெடுக்கும் நோக்கில் அமைதியான வழியில் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம்.

அந்த வகையில் நேற்றைய தினம் தையிட்டு பிரதேசத்தில் அமைக்கப்பட்ட விகாரை தனியார் கணியிற்குள் ஆக்கிரமிக்கப்பட்டு சட்டத்திற்கு புறம்பாக அமைக்கப்பட்டுள்ளதால் அதனை அகற்ற வேண்டுமென போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அதில், தமிழ் தேசிய மக்கள் முன்னணி என்ற ரீதியில் ஆதரவினை வழங்கினோம். ஆனால் போராட்டமானது போராட்டக்கறகளிற்கு உண்பதற்கு உணவே கொடுக்க முடியாத அளவிற்கு பொலிசாரால் மிகவும் கேவலமான முறையில் அடக்கி ஒடுக்கப்பட்டது. பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன், சட்ட ஆலோசகர் நடராஜ காண்டீபன் ஆகியோர் இங்கு வருகை தந்திருந்தனர். போராட்டக்கறகளிற்கான உணவுகள் மற்றும் மருத்துவ வசதிகளை கொண்டுவந்த வேலை பொலிசாரால் கைது செய்யப்பட்டு பலாலி பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து சென்று முறைப்பாடுகள் எடுத்த பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய வேளை அங்கு எமது நிலைமைகள் சட்டவாளர் சுகாஷினால் தெரியப்படுத்தப்பட்ட நிலையில், பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளோம்.

தமிழ் மக்களின் உணர்வு ரீதியான போராட்டங்களை தடுப்பதற்கு பரந்துபட்டு பார்க்கும் பொழுது எந்த இடமுமில்லை.

அத்தோடு எமது போராட்டத்திற்கு சாதகமான பதிலை வழங்கிய நீதிமன்றத்திற்கு நன்றிகள் எனவும் தெரிவித்தார்.

உள்நாட்டு செய்திகள் - யாழ்ப்பாணம்

